# பாடசாலையும் கல்வியும்

சுவிட்சர்லாந்தில் பள்ளி மற்றும் கல்வி
கட்டாயக் கல்வி
கட்டாயக் கல்விக்குப் பிந்தைய பயிற்சி (இடைநிலைப் பள்ளி II)
இடைக்கால வாய்ப்புகள்
உயர் கல்வி மற்றும் பல்கலைக்கழகம்
டிப்ளோமாக்களின் அங்கீகாரம் மற்றும் முந்தைய கற்றலின் சரிபார்ப்பு
பிரெஞ்சு மொழி கற்றல்

# சுவிட்சர்லாந்தில் பள்ளி மற்றும் கல்வி

நல்ல கல்வியைப் பெறுவது முக்கியம். கட்டாயக் கல்வி குழந்தைகளுக்கு தங்களின் தொழிலைத் தேர்ந்தெடுப்பதில் பயனுள்ளதாக இருக்கும் அறிவை வழங்குகிறது. கட்டாயக் கல்விக்குப் பிறகு, தொழில் அல்லது பொதுக் கல்வி மூலம் தங்களின் கல்வியைத் தொடர்வது முக்கியம். ஒரு நல்ல கல்வி உங்களுக்கு நல்ல வேலையைப் பெற உதவுகிறது.

## சுவிட்சர்லாந்தில் பள்ளி மற்றும் கல்வி முறை

சுவிட்சர்லாந்தில், பள்ளிக்கல்வி மூன்று நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:
1. கட்டாயக் கல்வி: தொடக்கப்பள்ளி மற்றும் இடைநிலைப் பள்ளி I
2. கட்டாயக் கல்விக்குப் பிறகு இடைநிலைப் பள்ளி II:
ஒன்று ஆரம்ப தொழிற்கல்வி (தொழில் பயிற்சி)
அல்லது பொதுக் கல்வி (உயர்நிலைப் பள்ளி, பொதுக் கல்விப் பள்ளி)
3. படிப்பைத் தொடர: சிறப்பு அறிவியல் கல்லூரிகள் (HES), பல்கலைக்கழக கல்லூரிகள் (HEU), ஆசிரியர் கல்விக் கல்லூரிகள் (HEP), மற்றும் தொழிற்கல்விக் கல்லூரிகள் (ஒன்றிய சான்றிதழ், ஒன்றிய டிப்ளமோ அல்லது உயர் கல்வி பட்டம் (ES).
கல்விக்கு அரசு (ஒன்றியம், காந்தோன்கள் மற்றும் கொம்யூன்கள்) பொறுப்பாகும். ஒன்றியம், காந்தோன்கள் மற்றும் கொம்யூன்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு பொறுப்புகளைக் கொண்டுள்ளன. இந்த காரணத்திற்காக, பள்ளிக்கல்வி முறைகளில் ஒரு காந்தோனிலிருந்து மற்றொரு காந்தோனிற்கு இடையே வேறுபாடுகள் உள்ளன.

## படிப்புக்கான கட்டணம்

கட்டாயக் கல்வி மற்றும் கட்டாயக் கல்விக்குப் பிந்தைய பயிற்சி (இடை நிலைப் பள்ளி II) இலவசம்.
கல்வியைத் தொடர விரும்புகிறீர்களா? போதிய வருமானம் இல்லையா?
காந்தோன் உங்களுக்கு உதவித்தொகை அல்லது கல்விக் கடன் மூலம் நிதி உதவி வழங்க முடியும். இந்த உதவி கல்விச் செலவின் ஒரு பகுதியை ஈடுகட்ட உதவும்.
நீங்கள் வெளிநாட்டவரா? நீங்களும் சில நிபந்தனைகளின் கீழ் கல்வி உதவித்தொகைக்கு பெறலாம்.
Service de la formation postobligatoire – SFP (கட்டாயக் கல்விக்குப் பிந்தைய பயிற்சி துறையின்) உதவித்தொகைப் பிரிவு கல்வி உதவித்தொகைகள் பற்றிய தகவல்களை வழங்குகிறது.

## கல்வி மற்றும் தொழில் தெரிவுகள் குறித்த ஆலோசனை

Centre d'orientation scolaire et professionnelle et de psychologie scolaire – COSP (பள்ளி மற்றும் தொழிற் கல்வி பற்றிய வழிகாட்டல் மற்றும் கல்வி உளவியல் மையம்) உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் தகவல்களை வழங்குகிறது. அது உங்கள் கல்வியின் வெவ்வேறு நிலைகளிலும், தொழிற் கல்வி, மேல் படிப்பு மற்றும் வேலை வாய்ப்புகளிலும் உங்களுக்கு துணை நின்று ஆலோசனை வழங்குகிறது.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/ecole-et-formation/lecole-et-la-formation-en-suisse

# கட்டாயக் கல்வி

கட்டாயக் கல்வி குழந்தைகளுக்கு அவர்களின் படிப்பைத் தொடர அடிப்படைப் பயிற்சியை வழங்குகிறது. பொதுப் பள்ளிகள் இலவசமானவை.

## கல்வி நிலைகள்: வெவ்வேறு படிகள்

ஜூரா காந்தோனில், கட்டாயக் கல்வி 11 ஆண்டுகள் நீடிக்கும். ஜூலை 31 ஆம் தேதியில் 4 வயது உள்ள (அதாவது ஜூலை 31 ஆம் தேதிக்கு முன்பும் அல்லது அன்றும் பிறந்த) குழந்தைகள் பள்ளிக்குச் செல்கிறார்கள்.
கட்டாயக் கல்வி இரண்டு படிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

- ஆரம்பக் கல்வி 8 ஆண்டுகள் நீடிக்கும்.

மாணவர்கள் படிப்படியாக பின்வரும் பாடங்களில் திறன்களை வளர்த்துக் கொள்கிறார்கள்: மொழிகள், கணிதம், அறிவியல், கலை, விளையாட்டு மற்றும் சமூக வாழ்க்கை.

- இடைநிலைப் பள்ளி (இரண்டாம் நிலை I) மூன்று ஆண்டுகள் நீடிக்கும்.

அவர்களின் திறன்களைப் பொறுத்து, மாணவர்கள் வெவ்வேறு நிலை கல்விக்கு வழிநடத்தப்படுகிறார்கள். அவை அவர்களின் அறிவை விரிவுபடுத்துகின்றன.
கூடுதலாக, அவர்கள் மேலும் சுதந்திரமாகி தொழில் பயிற்சிக்குத் தயாராகிறார்கள்.

**[illegible]?**

சிறப்புத் தேவைகள் அல்லது ஊனம் உள்ள குழந்தைகள் அவர்களின் பள்ளிப் படிப்பு முழுவதும் ஊக்குவிக்கப்பட்டு ஆதரிக்கப்படுகிறார்கள்.

**[illegible]?**

பிரெஞ்சு மொழி பேசாத குழந்தைகள் சிறப்பு உதவி பெறுகிறார்கள்.

## அரசு/தனியார் பள்ளிகள்

பொதுப் பள்ளிகள் இலவசமானவை. ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் ஒரே வகுப்பறையில் சேர்ந்து படிக்கிறார்கள். கற்பித்தல் மதத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல.
பெரும்பாலான குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் தங்கள் கட்டாயக் கல்வியை ஒரு பொதுப் பள்ளியில் படிக்கின்றனர்.
ஜூரா காந்தோனில் ஒரு தனியார் பள்ளியும் உள்ளது: போரென்த்ரூயில் (Porrentruy) உள்ள செயிண்ட்-சார்ல் (St-Charles).
உங்கள் குழந்தைகளை தனியார் பள்ளியில் சேர்க்க விரும்பினால், கல்விக் கட்டணத்தை நீங்களே செலுத்த வேண்டும்.

## உங்கள் குழந்தையை பள்ளியில் சேர்ப்பது

ஜூலை 31 ஆம் தேதியில் 15 வயது வரை உள்ள (அதாவது ஜூலை 31 ஆம் தேதிக்கு முன்பும் அல்லது அன்றும் பிறந்த) பிள்ளைகள் கட்டாயப் பள்ளியில் சேருகிறார்கள்.
நீங்கள் ஜூரா காந்தோனில் உள்ள ஒரு புதிய கொம்யூனுக்கு குடிபெயர்ந்திருக்கிறீர்களா?
உங்கள் குழந்தை 15 வயது அல்லது 15 வயதுக்குட்பட்டவரா?
நீங்கள் குடிபெயர்ந்த பிறகு கொம்யூனுக்கு வருகிறீர்களா? உங்கள் குழந்தையை பள்ளியில் சேர்க்க, உங்கள் புதிய கொம்யூனில் உள்ள பள்ளி நிர்வாகத்தைத் தொடர்பு கொள்ள வேண்டும்.
உங்கள் பிள்ளை 15 வயதுக்கு மேற்பட்டவரா?
நீங்கள் கட்டாயக் கல்விக்குப் பிந்தைய பயிற்சித் துறையை தொடர்பு கொள்ள வேண்டும். இந்தத் துறை பிள்ளைக்கு பயிற்சிக் கல்வியில் சேர உதவும்.

**« Sport-Arts-Etudes » (□□□□□□□□□□□□-□□□-□□□□□□□□□□□□)**

12 வயது முதல், உயர்நிலை விளையாட்டு அல்லது கலை நடவடிக்கைகளில் பங்கேற்கும் இளைஞர்கள் « Sport-Arts-Etudes » (SAE) 'விளையாட்டு-கலை-படிப்புகள்' இல் சேரலாம். பெற்றோர்கள் கல்வித் துறைக்கு எழுத்துப்பூர்வமாக விண்ணப்பிக்க வேண்டும்.

## பெற்றோரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

பள்ளி கட்டாயம் ஆனது. உங்கள் குழந்தை ஒரு சரியான சாக்கோ அல்லது காரணமோ இல்லாமல் பள்ளிக்குச் செல்லவில்லை என்றால் நீங்கள் சிக்கல்களைச் சந்திக்க நேரிடும்.
உங்கள் குழந்தைக்கு உடல்நிலை சரியில்லையா? அவர்கள் வகுப்பில் கலந்து கொள்ள முடியாதா? அப்படியென்றால் நீங்கள் பள்ளிக்குத் தெரிவிக்க வேண்டும்.
உங்கள் குழந்தை வீட்டுப்பாடம் செய்கிறதா என்பதையும் நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.
உங்கள் குழந்தையின் பள்ளிப் படிப்பில் நீங்கள் ஆர்வமாக இருப்பதைக் காட்டுவது முக்கியம். அவர்களை ஆதரிப்பதும் ஊக்குவிப்பதும் முக்கியம்.
உங்கள் குழந்தையின் பள்ளி வாழ்க்கையின் அனைத்து அம்சங்கள் பற்றிய தகவல்களையும் பள்ளி உங்களுக்கு வழங்குகிறது.
இதைச் செய்வதற்கு வாராந்திர பதிவு புத்தகம் (வாராந்திர குறிப்பேடு), பள்ளியிலிருந்து வரும் கடிதங்கள் அல்லது பெற்றோருடனான சந்திப்புகள் ஆகிய பல்வேறு வழிகள் உள்ளன.
உங்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே நல்ல ஒத்துழைப்பு முக்கியம். இது உங்கள் குழந்தையின் பள்ளிப்படிப்பு நன்றாக நடப்பதை உறுதி செய்கிறது.

## கேள்விகள் உள்ளனவா? உதவி தேவையா?

பள்ளி பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு, முதலில் ஆசிரியரைத் தொடர்பு கொள்ளவும்.
உங்கள் குழந்தைக்கு ஏதாவது தேவை என்று ஆசிரியர் நினைத்தாலோ அல்லது ஏதேனும் கேள்விகள் இருந்தாலோ, அவர்களும் உங்களைத் தொடர்பு கொள்வார்கள்.
உங்களுக்கு ஏதேனும் குறிப்பிட்ட சிரமங்கள் அல்லது பிரச்சனைகள் உள்ளதா?
நீங்கள் ஆசிரியரைத் தொடர்பு கொள்ளலாம். அவர்கள் உங்களை பொருத்தமான நபர்களிடம் வழிநடத்துவார்கள்.
நீங்கள் பள்ளி சமூக சேவையாளரை அல்லது Centre d’orientation scolaire et professionnelle et psychologie scolaire (COSP) (பள்ளி மற்றும் தொழிற் கல்வி பற்றிய வழிகாட்டல் மற்றும் கல்வி உளவியல் மையத்தை). நேரடியாகவும் தொடர்பு கொள்ளலாம்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/ecole-et-formation/lecole-obligatoire

# கட்டாயக் கல்விக்குப் பிந்தைய பயிற்சி (இடைநிலைப் பள்ளி II)

கட்டாயக் கல்விக்குப் பிறகு, இடைநிலைப் பள்ளியில் பொதுக் கல்வியிலோ அல்லது தொழிற்கல்வியிலோ இளைஞர்கள் தங்கள் கல்வியைத் தொடர்கின்றனர். பல்கலைக்கழகத்தில் படிக்க விரும்பும் இளைஞர்கள் உயர்நிலைப் பள்ளி டிப்ளோமா, தொழிற்கல்வி அல்லது சிறப்புக் கல்வி பெற வேண்டும்.

## ஆரம்ப தொழிற்கல்வி (தொழில்பயிற்சி)

கட்டாயக் கல்விக்குப் பிறகு, இளைஞர்கள் ஆரம்ப தொழிற்கல்வி (தொழில்பயிற்சி) தொடரத் தேர்வு செய்யலாம். இது ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ள அனுமதிக்கும் ஒரு அடிப்படை பயிற்சித் திட்டமாகும்.

**[illegible] [illegible] ([illegible] + [illegible])**

பயிற்சியின் போது, இளைஞர்கள் ஒரு நிறுவனத்தில் வேலை செய்கிறார்கள். அந்தத் தொழில் தொடர்பான நடைமுறைத் திறன்களைக் கற்றுக்கொள்கிறார்கள். மேலும் வாரத்தில் 1 அல்லது 2 நாட்கள் தொழிற்கல்விப் பள்ளிக்கு செல்கிறார்கள்.
இந்த வகைப் பயிற்சி இரட்டைப் பயிற்சி என்று அழைக்கப்படுகிறது: ஒரு பகுதி ஒரு நிறுவனத்திலும், மற்றொரு பகுதி தொழிற்கல்விப் பள்ளியிலும் நடைபெறுகிறது.

**[illegible]**

நிறுவனங்களில் குறித்தகால பயிற்சிகளுடன், ஒரு பள்ளியில் முழுநேர பயிற்சிப் படிப்பை பெறவும் முடியும்.

**[illegible]**

ஒரு பயிற்சிப் படிப்பு 2 முதல் 4 ஆண்டுகள் வரை நீடிக்கும். இளைஞர்கள் ஒன்றிய தொழிற்கல்வி சான்றிதழ் (attestation fédérale de formation professionnelle - AFP) அல்லது ஒன்றிய திறன் சான்றிதழ் (certificat fédéral de capacité - CFC) பெறுகிறார்கள்.
ஒரு பயிற்சிப் படிப்பு டிப்ளோமாவுடன், இளைஞர்கள் வேலை தேடலாம்.
அவர்கள் உயர் தொழிற்கல்வி பயிற்சியையும் பெறலாம், பின்னர் சிறப்புக் கல்லூரியில் சேரலாம்.
கட்டாயப் பள்ளிப்படிப்பின் இறுதி ஆண்டில், இளைஞர்கள் தாங்களாகவே ஒரு நிறுவனத்தில் பயிற்சி வேலையைத் தேட வேண்டும். பெற்றோர்கள் இளைஞர்களுக்கு உதவ வேண்டும்.
Centre d’orientation scolaire et professionnelle et de psychologie scolaire (COSP) (பள்ளி மற்றும் தொழிற் கல்வி பற்றிய வழிகாட்டல் மற்றும் கல்வி உளவியல் மையம்) இளைஞர்களுக்கு இலவசமாக ஆலோசனை வழங்கி வழிகாட்டுகிறது.
‘MON APP’ செயலி, இளைஞர்கள் தங்களுக்கு விருப்பமான ஒரு தொழிலைக் கண்டறியவும், ஒரு தொழிற்பயிற்சியைக் கண்டறியவும் உதவுகிறது.

## பொதுக் கல்வி (படிப்பை தொடர்தல் )

கட்டாயப் பள்ளிப் படிப்பிற்குப் பிறகு, இளைஞர்கள் தங்கள் படிப்பைத் தொடரவும் தேர்வு செய்யலாம். அவர்கள் உயர்நிலைப் பள்ளி அல்லது பொதுக் கல்விப் பள்ளியில் சேரலாம்.

**[illegible]**

உயர்நிலைப் பள்ளி மூன்று ஆண்டுகள் நீடிக்கும், மாணவர்கள் உயர்நிலைப் பள்ளி சான்றிதழ் (certificat de maturité gymnasiale) பெறுகிறார்கள். உயர்நிலைப் பள்ளி சான்றிதழ் அவர்கள் பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவனத்தில் தங்கள் படிப்பைத் தொடர அனுமதிக்கிறது.

பொரென்த்ரூயில் உள்ள காந்தோனல் உயர்நிலைப் பள்ளி, அவ்வாறு செய்ய விரும்பும் இளைஞர்களுக்கு ஜெர்மன்-பிரெஞ்சு இருமொழி பாடத் திட்டத்தையும் வழங்குகிறது.

**[illegible] (ECG)**

பொதுக் கல்விப் பள்ளி மூன்று ஆண்டுகள் நீடிக்கும்; மாணவர்கள் பொதுக் கல்விச் சான்றிதழைப் பெறுகிறார்கள். சான்றிதழைப் பெற்ற பிறகு, மாணவர்கள் கூடுதலாக ஒரு ஆண்டு படித்து சிறப்புப் பள்ளி சான்றிதழ் பெறலாம். மாணவர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்த துறையில் சிறப்புக் கல்லூரியில் (Haute Ecole Spécialisée - HES) தங்கள் படிப்பைத் தொடர சிறப்புப் பள்ளி சான்றிதழ் அனுமதிக்கிறது.

இறுதியாக, மாணவர்கள் முழுப் படிப்பையும் முடிக்காமல், நேரடியாக ஒன்றிய தேர்ச்சித் தேர்வுகளை எடுக்கலாம். மாணவர்கள் ஒரு தனியார் பள்ளியின் திட்டங்களைப் பின்பற்றி அல்லது சுயமாகக் கற்றுக்கொண்டு தேர்வுகளுக்குத் தயாராகலாம்.

## "விளையாட்டு-கலை-படிப்புகள்"

12 வயது முதல், உயர்நிலை விளையாட்டு அல்லது கலை நடவடிக்கைகளில் பங்கேற்கும் இளைஞர்கள் « Sport-Arts-Etudes » (SAE) 'விளையாட்டு-கலை-படிப்புகள்' இல் சேரலாம். பெற்றோர்கள் கல்வித் துறைக்கு எழுத்துப்பூர்வமாக விண்ணப்பிக்க வேண்டும்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/ecole-et-formation/la-formation-post-obligatoire-lecole-secondaire-i
i

# இடைக்கால வாய்ப்புகள்

கட்டாயக் கல்விக்குப் பிறகும், சில இளைஞர்களுக்கு அவர்கள் எந்தப் பயிற்சியைத் தொடர விரும்புகிறார்கள் என்பது இன்னும் தெரிவதில்லை. அல்லது சில நேரங்களில், அவர்கள் இன்னும் தங்கள் கல்வி அல்லது பிரெஞ்சுத் திறன்களை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். அல்லது அவர்களுக்குப் பயிற்சி வேலைக்கான இடம் கிடைக்கவில்லை. இடைக்கால வாய்ப்புகள் இளைஞர்கள் ஒரு வருடத்தில் ஒரு தீர்வைக் கண்டறிய அனுமதிக்கின்றன. Centre d'orientation scolaire et professionnelle et de psychologie scolaire (COSP) (பள்ளி மற்றும் தொழிற் கல்வி பற்றிய வழிகாட்டல் மற்றும் கல்வி உளவியல் மையம்) இளைஞர்களுக்குத் தகவல் கொடுத்து ஆலோசனை வழங்கும்.

## 12 ஆம் வகுப்பு

சில இளைஞர்கள் 11 ஆம் வருட பாடத்திட்டத்தை முறையாகப் பூர்த்தி செய்து தங்கள் கல்வித் திறனை மேம்படுத்த, 12 ஆம் வருட கட்டாயப் பள்ளியை முடிக்க வேண்டியிருக்கும். இதைச் செய்ய, பெற்றோர்கள் பிப்ரவரி மாத இறுதிக்குள் பள்ளிக்கு எழுத்துப்பூர்வமாக விண்ணப்பிக்க வேண்டும். இந்த முடிவை கல்வித் துறை எடுக்கிறது.
**??????? ??????????? 12 ??? ???????**
இளைஞர்கள் இந்த 12 ஆம் வகுப்பை பால்- காம்பாங் (Bâle-Campagne) காந்தோனில் உள்ள ஒரு பள்ளியில் 11 ஆம் வகுப்பில் ஜெர்மன் மொழியிலும் முடிக்கலாம். இது அவர்களின் ஜெர்மன் மொழித் திறனை மேம்படுத்த உதவும். இளைஞர்கள் மார்ச் மாத இறுதிக்குள் தங்கள் (ஜூரா) பள்ளியில் பதிவு செய்ய வேண்டும்.

## இணைப்புத் திட்டம்

பள்ளி அல்லது தொழிற்கல்வியைத் தொடங்குவதற்கு முன் தங்கள் கல்வி அறிவை மேம்படுத்த வேண்டிய மாணவர்களுக்காக இணைப்புத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
இந்தத் திட்டம் ஒரு வருடத்திற்கு 5 முழுநேர பள்ளி நாட்களைக் கொண்டுள்ளது.
இணைப்புத் திட்டத்திற்குப் பதிவு செய்ய, நாம் 'MON APP' செயலியை பயன்படுத்த வேண்டும்

## இரட்டை முன்-பயிற்சி (நிறுவனம் + பள்ளி)

சில நேரங்களில், ஒரு பயிற்சியைத் தொடங்குவதற்கு முன், ஒரு முன்-பயிற்சியை முடிப்பது நல்லது. இது கல்வித் திறன்களை மேம்படுத்த அல்லது பணிச்சூழலுடன் உங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ள உதவுகிறது. இரட்டை முன்-பயிற்சித் திட்டம், வாராந்திரம்: பள்ளியில் 2-3 நாட்கள் மற்றும் நிறுவனத்தில் 2-3 நாட்கள் வேலை.
இளம் புலம்பெயர்ந்தோருக்கு, **???????????????????????? ????-????????? [préapprentissage d'intégration - PAI]** (93811) உள்ளது. இந்த திட்டம் இளைஞர்கள் தங்கள் பிரெஞ்சு, கணிதம் மற்றும் பிற கல்வித் திறன்களை மேம்படுத்த உதவுகிறது.
முன்-பயிற்சிக்கு பதிவு செய்ய, நாம் 'MON APP' செயலியை பயன்படுத்த வேண்டும்.

## வழிகாட்டி ஆண்டு

சில சமயம், இளைஞர்கள் தங்கள் பயிற்சிக்கான நிறுவனத்தைக் இன்னும் கண்டுபிடிக்கவில்லை. அல்லது அவர்கள் தங்கள் எதிர்கால தொழிலை இன்னும் தேர்ந்தெடுக்கவில்லை. அப்போது அவர்கள் ஒரு ஆண்டு வழிகாட்டி பயிற்சியை பெறலாம். இந்த ஆண்டில், அவர்கள் தங்கள் படிப்பை மற்றும் பயிற்சி வேலைகளை தொடர்கிறார்கள்.
ஒரு வழிகாட்டி ஆண்டிற்குப் பதிவு செய்ய, நாம் 'MON APP' செயலியை பயன்படுத்த வேண்டும்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/ecole-et-formation/les-offres-de-transition

# உயர் கல்வி மற்றும் பல்கலைக்கழகம்

சுவிட்சர்லாந்தில், இரண்டு வகையான உயர்கல்வி நிலையங்கள் உள்ளன: பல்கலைக்கழகங்கள் மற்றும் சிறப்பு கல்லூரிகள் (Hautes écoles spécialisées - HES). அனைத்து உயர்கல்வி நிலையங்களும் போலோங் (Bologne) முறையான ஐரோப்பிய மூன்றாம் நிலை கல்வி முறை பின்பற்றுகின்றன: தொடர் கல்வி வடிவத்திலும் உயர் கல்வியைத் தொடர முடியும்.

## உயர் கல்வி முறை

சுவிஸ் உயர்கல்வி நிலையங்களில், பல்கலைக்கழகங்களுக்கும் சிறப்பு கல்லூரிகளுக்கும் இடையில் வேறுபாடு காட்டப்படுகிறது. சிறப்பு கல்லூரிகளில், கற்பித்தல் நடைமுறை சார்ந்தது; பல்கலைக்கழகங்களில், இது மிகவும் தத்துவார்த்த மற்றும் கல்வி சார்ந்தது.
இரண்டு வகையான பள்ளிகளும் சமமான மதிப்பைக் கொண்டுள்ளன. அவை ஐரோப்பிய மூன்றாம் நிலை கல்வி முறையான போலோங் (Bologne) முறையைப் பின்பற்றுகின்றன. படிப்பின் முடிவில், மாணவர்கள் ஐரோப்பா முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டத்தைப் பெறுகிறார்கள்: இளங்கலைப் பட்டம் (தோராயமாக 3 ஆண்டு படிப்பு) அதற்குப் பின்னர் முதுகலைப் பட்டம் (தோராயமாக 2 ஆண்டு படிப்பு).

## சிறப்பு கல்லூரிகளில் சேர்க்கை

சுவிஸ் தேர்ச்சி சான்றிதழுடன், சிறப்பு கல்லூரிகளில் சேர்க்கை உறுதி செய்யப்படுகிறது. வெளிநாட்டு பட்டப்படிப்பு சான்றிதழ்கள் தானாகவே அங்கீகரிக்கப்படுவதில்லை.
நீங்கள் படிக்க விரும்பும் சிறப்பு கல்லூரிக்கு நேரடியாக விண்ணப்பிக்க வேண்டும்.
சேர்க்கை தேவைகள் சிறப்பு கல்லூரிகளைப் பொறுத்து மாறுபடும்.
எடுத்துக்காட்டாக, சில சிறப்பு கல்லூரிகள் தேர்வுகளை நடத்துகின்றன அல்லது பயிற்சி வேலையை முடித்திருக்க கேட்கின்றன.
பொதுவாக, பிரெஞ்சு அல்லது ஜெர்மன் மொழியில் மிகச் சிறந்த தேர்ச்சி தேவை. முழுமையாக ஆங்கிலத்தில் கற்பிக்கப்படும் படிப்புகளைத் தவிர.
Centre d’orientation scolaire et professionnelle et de psychologie scolaire (COSP) (பள்ளி மற்றும் தொழிற் கல்வி பற்றிய வழிகாட்டல் மற்றும் கல்வி உளவியல் மையம்) சிறப்பு கல்லூரிகளில் உள்ள பல்வேறு படிப்பு வாய்ப்புகள் குறித்து இலவசமாக தகவல்களை வழங்குகிறது.

## உயர் தொழிற்கல்வி

சிறப்பு கல்லூரிகளைத் (Hautes Écoles -HES) தவிர, உயர் சிறப்பு கல்லூரிகளும் (Écoles Supérieures - ES) உள்ளன.
இந்த கல்லூரிகளில், CFC தொழிற்கல்வி சான்றிதழ் வைத்திருக்கும் நிபுணர்கள் உயர் சிறப்பு (ES) டிப்ளோமாவைப் பெறலாம். இந்த டிப்ளோமா, HES டிப்ளோமாவின் அதே தரத்தை உடையது, ஆனால் மிகவும் நடைமுறை மற்றும் தொழில் சார்ந்ததாகும்.

## தொடர்ச்சியான கல்வி

தொழில் வல்லுநர்கள் தொடர் கல்வி மூலம் நிபுணத்துவம் பெறலாம் மற்றும் அவர்களின் தொழில்முறை அறிவை ஆழப்படுத்தலாம். அவர்கள் ஒன்றிய டிப்ளோமா அல்லது ஒன்றிய பட்டம் (பிரெவே - Brevet) போன்ற டிப்ளோமாக்களைப் பெறலாம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/ecole-et-formation/les-etudes-superieures-et-luniversite

# டிப்ளோமாக்களின் அங்கீகாரம் மற்றும் முந்தைய கற்றலின் சரிபார்ப்பு

வெளிநாட்டு டிப்ளோமாக்கள் மற்றும் சான்றிதழ்கள் சுவிட்சர்லாந்தில் எப்போதும் அங்கீகரிக்கப்படுவதில்லை. சில தொழில்களுக்கு, டிப்ளோமா தேவைப்படுகிறது; அது கட்டாயமாகும். சில சந்தர்ப்பங்களில், உங்கள் வெளிநாட்டு டிப்ளோமா அங்கீகரிக்கப்படலாம். உங்கள் வெளிநாட்டு டிப்ளோமா அங்கீகரிக்கப்படவில்லையா? அல்லது ஒரு டிப்ளோமா குறைகிறதா? இந்த சந்தர்ப்பங்களில், நீங்கள் முந்தைய கற்றலைச் சரிபார்க்க விண்ணப்பிக்கலாம். இதன் பொருள் உங்கள் தொழில்முறை மற்றும் தனிப்பட்ட அனுபவங்கள் சரிபார்க்கப் பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதாகும்.

## டிப்ளோமா அங்கீகாரம்: ஒழுங்குபடுத்தப்பட்ட தொழில்களுக்கு

உங்களிடம் வெளிநாட்டு டிப்ளோமா உள்ளதா?
சில நிபந்தனைகளின் கீழ், உங்கள் டிப்ளோமாவின் அங்கீகாரத்திற்கு விண்ணப்பிக்கலாம். உங்கள் டிப்ளோமா அங்கீகரிக்கப்பட்டால், அது சுவிஸ் டிப்ளோமா அல்லது பள்ளிச் சான்றிதழுக்கு சமமாகக் கருதப்படலாம்.
சில தொழில்களுக்கு (சுகாதாரம், கல்வி மற்றும் சட்டம் ஆகிய துறைகளில்), சுவிட்சர்லாந்தில் பணிபுரிய வெளிநாட்டு டிப்ளோமாவின் அதிகாரப்பூர்வ அங்கீகாரம் தேவை. இந்தத் தொழில்கள் பாதுகாக்கப்பட்டவை.
எடுத்துக்காட்டாக, பின்வரும் தொழில்கள்: மருத்துவர், செவிலியர், ஆசிரியர் அல்லது வழக்கறிஞர்.
ஒரு டிப்ளோமா அங்கீகரிக்கப்படுவதற்கு (உங்கள் டிப்ளோமா அங்கீகரிக்கப்படுவதற்கான நடைமுறையை மேற்கொள்ள), பணம் செலவாகும்.
Secrétariat d’État à la formation, à la recherche et à l’innovation (SEFRI) (கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதுமைக்கான தேசிய செயலகத்தின்) Reconnaissance.swiss வலைத்தளம் தொழிலைப் பொறுத்து பின்பற்ற வேண்டிய நடைமுறையை விளக்குகிறது. அது தொடர்புடைய துறைகளுக்கான தொடர்பு விவரங்களையும் வழங்குகிறது.

## நிலைச் சான்றிதழ்: ஒழுங்குபடுத்தப்படாத தொழில்களுக்கு

பெரும்பாலான தொழில்களுக்கு, சுவிட்சர்லாந்தில் பணிபுரிய அதிகாரப்பூர்வ அங்கீகாரம் தேவையில்லை. எடுத்துக்காட்டாக, பின்வரும் தொழில்கள்: சமையல்காரர், மெக்கானிக், ஐடி நிபுணர், கிராஃபிக் டிசைனர், வயது வந்தோர் கல்வியாளர், முதலியன.
இந்தத் தொழில்களுக்கு, நீங்கள் நிலைச் சான்றிதழைக் கோரலாம். இந்தச் சான்றிதழ் சுவிஸ் கல்வி முறையில் உங்கள் வெளிநாட்டு டிப்ளமோவின் மதிப்பைக் காட்டுகிறது. இந்தச் சான்றிதழ் உங்கள் வேலை தேடலிலும் பயனுள்ளதாக இருக்கும்.
Secrétariat d’État à la formation, à la recherche et à l’innovation (SEFRI)(கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதுமைக்கான தேசிய செயலகத்தின்) reconnaissance.swiss வலைத்தளம் பயனுள்ள தகவல்களை அனுப்புகிறது.

## முன் கற்றலின் சரிபார்ப்பு

டிப்ளமோ இல்லையா?
உங்கள் தொழில்முறை பின்னணி, தொழில்முறை அனுபவம் மற்றும் தனிப்பட்ட அனுபவம் ஆகியவற்றை அங்கீகரிக்கப்பட முயற்சி செய்யலாம். இந்த அனுபவம் அனைத்தையும் ஒரு தொழில்முறை டிப்ளமோவின் (CFC அல்லது AFP) ஒரு பகுதியாகவோ அல்லது முழு டிப்ளமோவாகவோ அங்கீகரிக்கப்படலாம். இந்த செயல்முறை முன் கற்றலின் சரிபார்ப்பு என்று அழைக்கப்படுகிறது.
ஜூரா காந்தோனின் Centre d'orientation scolaire et professionnelle (COSP) (பள்ளி மற்றும் தொழிற் கல்வி பற்றிய வழிகாட்டல் மற்றும் கல்வி உளவியல் மையம்) இந்த சரிபார்ப்பு பற்றி உங்களுக்கு தகவல் கொடுக்கும். இந்த செயல்முறை குறித்து அது உங்களுக்கு ஆலோசனை வழங்கும், இது இலவசம்.

## படிப்பு முடித்ததற்கான சான்றிதழை மீண்டும் பெறுதல்

உங்களுக்கு தொழில்முறை அனுபவம் உள்ளதா, ஆனால் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளமோ அல்லது படிப்பு முடித்ததற்கான சான்றிதழ் இல்லையா? நீங்கள் ஒரு தொழிற்கல்வி பயிற்சி திட்டத்திற்கு சுவிஸ் படிப்பு முடித்ததற்கான சான்றிதழைப் பெறலாம்.
சான்றிதழ் திரும்பப் பெற, அதன் செயல்முறை உங்கள் பயிற்சி, படிப்பு முடித்ததற்கான அனுபவம் மற்றும் வயதைப் பொறுத்தது. எல்லா சந்தர்ப்பங்களிலும், நீங்கள் பிரெஞ்சில் (நிலை B1/B2) நல்ல தேர்ச்சியைப் பெற்றிருக்க வேண்டும்.
மேலும் தகவலுக்கு, Centre d’orientation scolaire et professionnelle (COSP) (பள்ளி மற்றும் தொழிற் கல்வி பற்றிய வழிகாட்டல் மற்றும் கல்வி உளவியல் மையத்தை) . தொடர்பு கொள்ளவும் இது இலவசம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/ecole-et-formation/reconnaissance-des-diplomes-et-validation-des-acquis-dexperiences

# பிரெஞ்சு மொழி கற்றல்

பேசி புரிந்துகொள்வதற்கும் வேலை அல்லது பயிற்சி பெறுவதற்கும் பிரெஞ்சு மொழியைக் கற்றுக் கொள்வது முக்கியம். இது அன்றாட பிரச்சனைகளை தீர்க்கவும் உதவுகிறது.

## ஜூரா காந்தோனில் பிரெஞ்சு பாடங்கள்

COMUNICA திட்டம் வெளிநாட்டினருக்கு ஆரம்ப நிலை (A1) முதல் மேம்பட்ட நிலை (B2) வரை பிரெஞ்சு பாடங்களை வழங்குகிறது. இந்த பாடங்கள் விலை உயர்ந்தவை அல்ல. COMUNICA திட்டத்தில், நமது எழுத்துக்களை அறியாதவர்கள் அல்லது படிக்க அல்லது எழுதுவதில் சிரமம் உள்ளவர்களுக்கான படிப்புகளும் உள்ளன: எழுத்தறிவு பாடங்கள்.
சில கொம்யூன்கள் கட்டணத்தில் ஒரு பகுதியைச் செலுத்துகின்றன.
பெண்கள் மற்றும் குடும்பங்களுக்கான அனிமேஷன் மற்றும் பயிற்சி மையம் (CAFF) அங்கேயே குழந்தைகளை பார்த்துக் கொள்ளும் சேவையுடன் பெண்களுக்கான பிரெஞ்சு பாடங்களை வழங்குகிறது. இந்த பாடங்கள் விலை உயர்ந்தவை அல்ல.
பிராந்தியத்தில் பிற பிரெஞ்சு பாடங்கள் உள்ளன.
AJAM மொழி பாடங்களை கூட குறிப்பாக புகலிடம் கேட்டு வருபவர்களுக்கு வழங்குகிறது

## பிரஞ்ச்சில் எந்த நிலை?

ஒரு நபரின் பிரெஞ்சு மொழி தேர்ச்சியின் நிலையைக் கண்டறிய, "மொழிகளை கற்க, கற்பிக்க, மதிப்பீடு செய்ய ஐரோப்பிய பொது கட்டமைப்பு (CECR)" பயன்படுகிறது.
இந்த கட்டமைப்பு A1 (தொடக்கம்) நிலையில் இருந்து C2 (முழுமையான தேர்ச்சி) நிலை வரை செல்கிறது. தொழில் பயிற்சியில் சேர நீங்கள் B1 அல்லது B2 அளவைக் கொண்டிருக்க வேண்டும்.
"fide" தேர்வானது சுவிட்சர்லாந்தில் அன்றாட வாழ்க்கைக்கான பிரஞ்சு நிலையை அளக்கிறது. இது வாய்மொழி (பேச்சு) மற்றும் எழுத்து மொழியின் நிலையை அளக்கிறது. முடிவுகள் "மொழி பாஸ்போர்ட்டில்" கொடுக்கப் படுகின்றன. இந்த பாஸ்போர்ட்டை வேலை தேட, குடியிருப்பு அல்லது தங்கல் விசாவுக்கு அல்லது சுவிஸ் குடியுரிமைக்கு விண்ணப்பிக்க பயன்படுத்தப்படலாம்.

## பிரஞ்சு மற்றும் குழந்தைகள்

வெளிநாட்டு குழந்தைகளை, பிரெஞ்சு மொழி பேசும் குழந்தைகளுடன் கூடிய விரைவில் பழக விட வேண்டும். பள்ளிக்குச் செல்வதற்கு முன் அவர்கள் பிரெஞ்சு மொழியைக் கற்றுக்கொள்வது முக்கியம். குழந்தை காப்பகங்கள், மழலையர் பள்ளி அல்லது பெற்றோர் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு வாய்ப்புகள் இதற்கு மிகவும் நல்லது.
பெற்றோர்களும் தங்கள் சொந்த மொழியை குழந்தைகளுடன் அதிகம் பயன்படுத்த வேண்டும். இதுவும் முக்கியமானது.
உதாரணமாக: குழந்தைகளிடம் அதிகம் பேசுங்கள், அவர்கள் சொல்வதைக் கேளுங்கள், அவர்களின் சொந்த மொழியில் கதைகளைச் சொல்லுங்கள்.
பள்ளிக் குழந்தைகளும் தங்கள் மொழியிலேயே பாடம் கற்கலாம். இந்த படிப்புகள் பிறப்பிட மொழி மற்றும் கலாச்சார படிப்புகள் (LCO படிப்புகள்) என்று அழைக்கப் படுகின்றன. இந்தப் படிப்புகள் பொதுவாக பிறப்பிட நாட்டின் தூதரகம் அல்லது துணைத் தூதரகம் அல்லது ஒரு சங்கத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்றன.
LCO படிப்புகள் பற்றிய அனைத்து தகவல்களையும் பள்ளிகள் வழங்குகின்றன.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/ecole-et-formation/apprendre-le-francais